சுருக்கம்

பள்ளிக்கல்வி – பள்ளிகளின் தகவல் சார்ந்து ஒருங்கிணைந்த இணையதளம் www.pallikalvi.in என்ற பெயரில் புதிய இணைய தளம் - உருவாக்கவும் மற்றும் அதனை பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலம் பராமரிக்கவும் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுமதி – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

பள்ளிக் கல்வி(இ2)த் துறை

அரசு ஆணை (நிலை) எண். 126 நாள்: 12.06.2008

திருவள்ளுவர் ஆண்டு 2039,
வைகாசி, 30.

படிக்கப்பட்டவை:-

பள்ளிக்கல்வி இயக்குநரின் கடிதம் ஆர்.வி.எண்.045649/F-3/2007 நாள் 26.4.2008 மற்றும் 06.06.2008.

- - - - - -

**ஆணை:**

பள்ளிகளின் தகவல் சார்ந்த இணைய தள தொகுப்பினை உருவாக்கும் பொருட்டு பள்ளிக் கல்வித் துறை சார்ந்த அனைத்து பள்ளிகள் பற்றிய விவரங்களைத் தொகுத்து இவ்விவரங்களை மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகத்தினர் பயன்படுத்தும் வகையில் ஒருங்கிணைந்த www.pallikalvi.in என்ற புதிய இணைய தளத்தினை உருவாக்கிடவும் இவ்விணைய தளம் மற்றும் மின் ஆளுகைக்கு தேவைப்படும் வன்பொருட்கள் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மூலம் கொள்முதல் செய்யவும் இவ்விணைய தளத்தினை பள்ளிக்கல்வி துறைக்கென உள்ள மாநில பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலம் பொதுமக்கள் மற்றும் தனியார் நிறுவனங்களின் பங்களிப்பு அடிப்படையில் செயல்படுத்திடவும் உரிய ஆணை வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் கோரியுள்ளார்.

2. பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை நன்கு ஆய்வு செய்யப்பட்டது. பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை ஏற்று –

(i) பள்ளிக் கல்வித் துறைக்கென இணைய தளம் www.pallikalvi.in என்ற பெயருடன் தொடங்கிட அனுமதித்தும்;

(ii) www.pallikalvi.in என்ற இணைய தளம் மற்றும் மின் ஆளுகைக்கு தேவைப்படும் வன்பொருட்கள் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மூலம் கொள்முதல் செய்யவும் இதனை பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலம் பொதுமக்கள் மற்றும் தனியார் நிறுவனங்களின் பங்களிப்பின் அடிப்படையில் செயல்படுத்திட அனுமதித்தும்;

(த.பி.பா)

(iii) மத்திய மற்றும் மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட உயர்க்கல்வி நிறுவனங்கள் மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் விவரங்களை அனுமதிப்பதன்

மூலம் கிடைக்கும் வருவாய் முழுவதையும் மாநில பெற்றோர் ஆசிரியர் கழகத்தின்மூலம் இதற்கென தனியொரு வங்கி கணக்கினை தொடங்கி அதில் இத்தொகையினை வைத்து பராமரித்து இந்த இணைய தளத்தை நிறுவவும், தொடர்ந்து பராமரிக்கவும் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுமதி வழங்கியும் ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம.குற்றாலிங்கம்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6.
தலைவர்/ செயலாளர், பெற்றோர் ஆசிரியர் கழகம்,சென்னை-6.

**நகல்:**
பள்ளிக் கல்வித் துறையின் அனைத்துப் பிரிவுகள், சென்னை-9..
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை-9.
பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் அலுவலகம், சென்னை-9.
செயலாளரின் தனிச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை-9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.